| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.சி. உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 127311 / எச்.1 / 2019** **நாள் : 05.12.2019**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச் 2020 – தனித் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் – செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

–––––

நடைபெறவிருக்கும் மார்ச் 2020, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள், கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examination Service Centres) நேரில் சென்று ஆன்–லைனில் விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறும் ஒளி/ஒலி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு :** செய்திக்குறிப்பு.

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்– தங்கள் ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, மாணவர்களை அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள் – மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006**

**மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் 2020**

**தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

**செய்திக் குறிப்பு**

நடைபெறவுள்ள மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) மற்றும் இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வுகளை பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) எழுதி தேர்ச்சி பெறாதவர்கள் மார்ச் 2020 மற்றும் ஜூன் 2020 பருவங்களில் நடைபெறும் மேல்நிலை பொதுத்தேர்வுகளை பழைய பாடத்திட்டத்திலேயே எழுதலாம்.

கடந்த ஆண்டு நேரடித் தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவரும், தற்போது மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வெழுதுவதற்கும், முதலாமாண்டு (+1) தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுதுவதற்கும் சேர்த்து விண்ணப்பிக்கலாம்.

**மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

1. ஏற்கனவே நடத்தப்பட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்கள் (H வகை), தேர்ச்சிப் பெறாத பாடங்களில் மீண்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.
2. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று **(மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக பெற்ற இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) சமர்பிக்கப்பட வேண்டும்)** ஓராண்டு இடைவெளியும் 01.03.2020 அன்று 15 ½ வயதும் பூர்த்தி அடைந்தவர்கள் மட்டுமே "நேரடித் தனித்தேர்வர்களாக" (HP வகையினர்) தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு :-**

**பள்ளி மாணவர்களாக மார்ச் 2019 பருவத்தில் +1 தேர்வெழுதிய அனைவரும், தோல்வியடைந்த பாடங்களில் மீண்டும் தேர்வெழுத சேவை மையங்களுக்குச் சென்று விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவர்கள் தாங்கள் தற்போது +2 பயிலும் பள்ளிகள் மூலம் தேர்வெழுதுவதற்கு உரிய தேர்வுக் கட்டணத்தினை மட்டும் செலுத்த வேண்டும்.**

**மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுத விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

1. இத்துறையால் நடத்தப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வினை ஏற்கனவே நேரடித் தனித்தேர்வராக எழுதி தேர்ச்சிப் பெற்ற தேர்வர்கள் அனைவரும், மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

2. கடந்த ஆண்டு அல்லது அதற்கு முன்னர் முதன்முறையாக நேரடி தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் தற்போது மேல்நிலை முதலாமாண்டு தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிக்கும்பொழுது, அத்துடன் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதுவதற்கு கண்டிப்பாக விண்ணப்பித்து பதிவுசெய்திடல் வேண்டும்.

3. கடந்த மார்ச் 2019 பருவத்தில் புதிய நடைமுறையில் (600 மதிப்பெண்கள்) நடத்தப்பட்ட மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வினை பள்ளி மாணவராக / நேரடித் தனித்தேர்வராக எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

4. மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை பழைய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) எழுதி தேர்ச்சி பெறாதோர், தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். **இத்தேர்வர்களுக்கு புதிய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 70/90 மதிப்பெண்கள் வீதம்) மட்டுமே தேர்வு நடத்தப்படும்.**

<u>முக்கியக் குறிப்பு:-</u>

- **பள்ளி மாணவராக மார்ச் 2019 +1 தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற / தேர்ச்சிப் பெறாத தேர்வர்கள் தற்போது பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலாமல் பள்ளியில் இருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநின்றவர்களாக இருப்பினும், அவர்கள் மார்ச் 2020 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதுவதற்கும், +1 தேர்வில் தோல்வியடைந்த பாடங்களை மார்ச் 2020 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் எழுதுவதற்கும் சேவை மையங்களுக்குச் சென்று விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவர்கள் +1 பயின்ற பள்ளியின் வாயிலாக தேர்வெழுத அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறு தேர்வெழுத அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழை +1 பயின்ற பள்ளியில் ஒப்படைத்து, உரிய தேர்வுக் கட்டணத்தினை மட்டும் செலுத்த வேண்டும்.**

- **அரசாணை (1டி) எண்.573, பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை, நாள்.03.10.2017–ன்படி, நேரடித் தனித்தேர்வர்களாக முதன் முறையாக மேல்நிலை பொதுத் தேர்வெழுத விரும்புவோா், மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வெழுதிய பின்னரே மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வு எழுத வேண்டும்.**

<u>பாடத்திட்டம்</u>

மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வெழுதும் நேரடித் தனித்தேர்வர்கள் (HP வகை) 2018–2019 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி பகுதி I மற்றும் II மொழிப்பாடங்களுடன் பின்வரும் 5 பாடத்தொகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

**<u>தேர்வெழுத தேர்வு செய்ய வேண்டிய பாடத்தொகுதிகள் (புதிய பாடத்திட்டம்)</u>**

| பாடத் தொகுப்பு எண் | பகுதி 3 பாடங்கள் | | | |
|---|---|---|---|---|
| 2704 | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 2705 | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 2706 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | அறவியல் மற்றும் இந்தியக் கலாச்சாரம் |
| 2707 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| 2708 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் |

**<u>ஏற்கனவே பழைய நடைமுறையின்படி (Old Pattern) மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் புதிய நடைமுறையில் (New Pattern) தேர்வெழுதினால் மதிப்பெண் வழங்கும்முறை</u>**

ஏற்கனவே பழைய நடைமுறையின்படி (Old Pattern) (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர், விண்ணப்பித்து வருகைபுரியாதோர் ஆகியோருக்கு தேர்ச்சி பெறாத பாடங்களில் புதிய நடைமுறையின்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களுக்கு 70 மதிப்பெண்களுக்கும், செய்முறைத் தேர்வில்லாத பாடங்களுக்கு 90 மதிப்பெண்களுக்கும் தேர்வு நடத்தப்பட்டு, அவர்கள் பெறும் மதிப்பெண்கள் 150/200 மதிப்பெண்களுக்கு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்தபின்னர் தேர்வு முடிவு வெளியிடப்படும்.

**<u>(i) மொழிப் பாடம் மற்றும் ஆங்கிலப் பாடம்</u>**

பழைய நடைமுறையின்படி (Old Pattern) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் 100 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட முதல் தாளினையும், 80 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட இரண்டாம் தாளினையும், எழுதி தோல்வியடைந்த தேர்வர்கள், 90 மதிப்பெண்களுக்கு ஒரே தாளாக நடத்தப்படும் மொழிப்பாடம் / ஆங்கிலப்பாடத்தேர்வினை எழுதுதல் வேண்டும். அப்பாடத்தேர்வுகளில் அத்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கு பெறும் மதிப்பெண்களை 2 –ஆல் பெருக்கி 180 மதிப்பெண்களுக்கான மதிப்பெண்களாக மாற்றம் செய்து, கற்றல் / கேட்டலுக்கான 20 மதிப்பெண்களையும் சேர்த்து 200 மதிப்பெண்களுக்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

**(ii) செய்முறைத் தேர்வு இல்லாத (Non Practical ) பாடங்கள்**

ஜுன் 2019 வரை பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி, செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தனித்தேர்வர்களுக்கு மார்ச் 2020 முதல் புதிய நடைமுறையில் 90 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். 90 மதிப்பெண்களுக்கு தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் $x$ எனில், அம்மதிப்பெண்ணை 90 ஆல் வகுத்து, 200 ஆல் பெருக்கி $\left[\frac{x}{90} \times 200\right]$ 200க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

**(iii) செய்முறைத் தேர்வு உள்ள (Practical ) பாடங்கள்**

ஜுன் 2019 வரை பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி, செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தனித்தேர்வர்களுக்கு மார்ச் 2020 முதல் புதிய நடைமுறையில் 70 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். 70 மதிப்பெண்களுக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்கள் 150க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும். (செய்முறைத் தேர்வு 50 மதிப்பெண்கள்) எழுத்துத்தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் $x$ எனில், அம்மதிப்பெண்ணை 70 ஆல் வகுத்து, 150 ஆல் பெருக்கி $\left[\frac{x}{70} \times 150\right]$ பெறப்படும் மதிப்பெண்ணுடன் செய்முறைத்தேர்வின் மதிப்பெண்ணையும் சேர்த்து 200க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

**விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service centres)**

தனித்தேர்வர்கள் தங்களது விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக சேவை மையங்கள் (Service centres) அமைக்கப்பட்டுள்ளன. தனித்தேர்வர்கள் இம்மையங்களுக்கு நேரில் சென்று தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் (Government Examinations Service centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**<u>அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service centres) சென்று விண்ணப்பிப்பதற்கான தேதிகள்</u>**

**மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுள்ள தனித்தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று 11.12.2019 (புதன்கிழமை) முதல் 20.12.2019 (வெள்ளிக்கிழமை) வரையிலான நாட்களில் (15.12.2019 ஞாயிற்றுக்கிழமை தவிர) காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிக்குள் இணையதளம் மூலம் தங்கள் விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளலாம்.**

**<u>தேர்வுக் கட்டணம், ஆன்–லைன் பதிவுக் கட்டண விவரம் மற்றும் செலுத்தும் விதம் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ35/–ம் செலுத்த வேண்டும். | ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |
| 2. | மேல்நிலை முதலாமாண்டு அல்லது இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுதவுள்ள தனித்தேர்வர்கள் | தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>இதரக் கட்டணம் ரூ.35/–<br>மொத்தம் ரூ.185/– | ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>மாற்றுத் திறனாளிகள் கவனத்திற்கு:</u>**

1. பார்வையற்றோர்/வாய்பேசாத மற்றும் காதுகேளாதோருக்கு மேற்குறிப்பிட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த அரசாணைகளை www.dge.tn.gov.in என்ற அரசுத் தேர்வுகள் இணைய தளத்தில் காணலாம்.

3. அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், **<u>உரிய மருத்துவச் சான்றிதழ்களை கட்டாயமாக இணைத்து</u>** சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம்:**

ஆன்–லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை (Hall Ticket) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால், ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**தேர்வு மையம்:**

தனித்தேர்வர்கள் அவரவர்கள் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்திலேயே தேர்வு எழுத வேண்டும்.

**மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

| | **ஏற்கனவே +1 தேர்வெழுதி தோல்வியுற்றோர்** | | **முதன் முறையாக +1 தேர்வெழுதுவோர்** |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் | 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக்கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |
| 2. | அச்சிட்டு வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த (+1 மற்றும் +2) மதிப்பெண் பட்டியலின் (Statement of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested Copy) **(மதிப்பெண் சான்றிதழ்களின் நகலில் தேர்வர் தாம் ஏற்கனவே +2 பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடம் அல்லது ஏதேனும் ஒரு அரசுப்பள்ளி தலைமையாசிரியரிடம் சான்றொப்பம் பெற வேண்டும்.)** / இணையதளம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஏற்கனவே +1 தேர்வெழுதியதற்கான மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் / தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். | 2. | பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ். (அல்லது) பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் மற்றும் **அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானததுதான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| 3. | ––– | 3. | அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ் (Original Transfer certificate) |
| 4. | ––– | 4. | அசல் இடப்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate) (வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

**மேல்நிலை இரண்டாமாண்டு (+2) தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

| | ஏற்கனவே +2 தேர்வெழுதி தோல்வியுற்றோர் | | +1 தேர்வெழுதியபின் (600 மதிப்பெண்களுக்கு) முதன்முதலாக +2 தேர்வெழுதுவோர் |
|---|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் | 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக்கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |
| 2. | இதுவரை எழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களின் (Certificate of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested copy) / ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியலின் (Statement of Marks) சான்றொப்பமிட்ட நகல் (Attested copy) **(மதிப்பெண் சான்றிதழ்களின் நகலில் தேர்வர் தாம் ஏற்கனவே +2 பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடம் அல்லது ஏதேனும் ஒரு அரசுப்பள்ளி தலைமையாசிரியரிடம் சான்றொப்பம் பெற வேண்டும்.)** | 2. | இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் அல்லது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். |
| 3. | தேர்வெழுத தேவையான வருகைப் பதிவு உள்ளது என்பது தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக தேர்வெழுத பதிவு செய்து தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்). | 3. | ––– |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | 4. | ––– |

மேற்குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் பெறப்படாத மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்விற்கான விண்ணப்பங்கள் மற்றும் தபால் மூலம் பெறப்படும் மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கண்டிப்பாக எவ்வித முன்னறிவிப்புமின்றி தானாகவே நிராகரிக்கப்படும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் வரை தனித்தேர்வர்களுக்குத் தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்டப் பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும், இத்தேர்வுகள் சார்ந்த விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

ஒம்/–
**இயக்குநர்**

**இடம் : சென்னை–6**
**நாள் : 05.12.2019.**